செ.வெ.எண்: 15 நாள்: 08.07.2016

# தமிழக அரசின் அனைத்து திட்டங்களையும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை பாலமாக செயல்பட்டு வருகிறது - புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முதலில் கையெழுத்திட்ட 5 முக்கியத்திட்டங்கள் குறித்த தகவல்கள் அடங்கிய விளம்பர பலகைகளை அனைத்து இடங்களிலும் வைப்பது தொடர்பாக அனைத்து அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.07.2016) நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 6வது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் முதலில் கையெழுத்திட்ட 5 முக்கிய திட்டங்களை பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பர பலகைகளில் (Flex Board) தயார் செய்து மக்கள் அதிகமாக கூடும் இடங்களான மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தாலுகா அலுவலகங்கள், உள்ளாட்சித்துறை அலுவலகங்கள், பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், கிராம ஊராட்சிகள் போன்ற இடங்களில் நிறுவிட தமிழகஅரசு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பணிகளை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் மாவட்டத்தில் விளம்பர பலகைகளை பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், நியாயவிலைக்கடைகள், அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம், அனைத்து ஊராட்சி மன்ற அலுவலகங்கள், அனைத்து பேரூராட்சி அலுவலகங்கள், திரையரங்குகள், அனைத்து பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் ஆகிய பொது இடங்களில் 12 x 8 என்ற அளவுகளில் உடனடியாக தயாரித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் வைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதன் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலில் கையெழுத்திட்ட 5 முக்கியத்திட்டங்கள் குறித்த தகவல்களை பொதுமக்கள் அறிந்து பயன்பெறுவதுடன் தமிழகஅரசின் அனைத்து திட்டங்களையும் பொதுமக்கள் அறியும் வகையில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை பாலமாக விளங்குகிறது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலில் கையெழுத்திட்ட 5 முக்கியத்திட்டங்கள் குறித்த தகவல்கள் அடங்கிய கையேடுகளை அனைத்து அரசு அலுவலர்களுக்கும் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.சந்தோஷ்குமார், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திருமதி.க.பிரேமலதா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (கூ.பொ) திரு.முருகண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் திரு.ராசாராம், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.க.பிரபாகரன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை**